DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure Judicial Form No.53)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, SIVAGANGAI.

| | |
|---|---|
| Calender | Case No. CC . 94/2015 |
| Miscellaneous | |
| Preliminary Register | |
| Sessions | |
| Deposition of Witness for | Prosecution Pw 6 |
| Name | பாக்கியராஜ் |
| Father / Husband Name | அம்பலம் |
| Village | |
| Taluk | சிவகங்கை |
| Caste | |
| Calling | |
| Religion | |
| Age | |

Solemnly affirmed in accordance with the Provision of Act X of 1873 of the date of 19th June 2023.

---

**(எதிரிகள் ஆஜரில்லை. எதிரிகள் தரப்பில் குவிமுச பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது)**

**முதல் விசாரணை:-**

1) நான் கீழக்கண்டனியில் குடியிருந்து வருகின்றேன். நான் கார் டிரைவராக வேலை செய்து வருகின்றேன். கடந்த 18.09.2014 ம் தேதி மாலை 06.00 மணியளவில் நானும், குமரவேல் என்பவரும் சிவகங்கை புதிய நீதிமன்றம் அருகே வந்து கொண்டிருந்த போது சிவகங்கை நகர் காவல் நிலைய சார்பு ஆய்வாளர் எங்கள் இருவரையும் அழைத்து வழக்கு பற்றி எடுத்துக்கூறி எங்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர், மாதிரி வரைபடம் தயார் செய்தனர். நாங்கள் சாட்சி கையொப்பம் செய்தோம் .

2) என்னிடம் காட்டப்படும் அ.சா.ஆ. 3 பார்வை மகஜர் மற்றும் மாதிரி

வரைபடம் சம்பவ இடத்தில் வைத்து எங்கள் முன்னிலையில் தயார் செய்தவை தான். அ.சா.ஆ. 3 பார்வை மகஜரில் உள்ள 2 வது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். **(அந்த பார்வை மகஜரில் உள்ள 2 வது சாட்சி கையொப்பம் மட்டும் அ.சா.ஆ. 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**. என்னுடன் சேர்த்து குமரவேல் 1வதாக சாட்சி கையொப்பம் செய்தார். போலிசார் என்னை விசாரித்தனர்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:-**

1) புகார்தாரர் சௌந்தராஜனை எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. எனக்கு வழக்கு சம்பவம் பற்றி நேரடியாக எதுவும் தெரியுமா என்றால் சரிதான். போலிசார் என்னிடம் எழுதாத வெள்ளைத்தாளில் கையொப்பம் செய்தாரா என்றால் இல்லை எழுதியதில் தான் கையொப்பம் செய்தேன். என்னை போலிசார் எப்போது விசாரித்தார்கள் என்றால் பார்வை மகஜர் தயார் செய்யும் போது என்னை விசாரித்தார்கள். அதன் பிறகு விசாரித்தார்களா என்றால் இல்லை.

2) என்னுடம் சாட்சி கையொப்பம் செய்த குமரவேலை தெரியுமா என்றால் தெரியும் அவர் அன்றைய தினம் என்னுடன் தான் வந்தார். நான் சொல்வது போல் சொன்ன தேதியில், சொன்ன இடத்தில் வைத்து பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்யவில்லை என்றாலும், காவல் நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்துவிட்டு தற்சமயம் சம்பவ இடத்தில் வைத்து கையொப்பம் செய்ததாக பொய்யாக சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல.

(ஒம்)திருமதி.J.அனிதா கிறிஸ்டி, 19.06.2023
நீதித்துறை நடுவர் எண்.1,
சிவகங்கை.

சாட்சி அரசு எதிரிதரப்பு வழக்கறிஞர்கள் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் சொல்லச்சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண். 1,
**சிவகங்கை.**